# நடுகை

விதை : 05 தருகை : 20/= 2021 பங்குனி


சிவபெருமான் இந்நிலத்தில் வந்தார்
சில்லாலைப் பக்கம் நடந்தார்
அவர் உடை கண்டால் விடுமா
அவ்விடத்து நாய்? அப்பன்
அவசரமாய் தம்விடை இவர்ந்தார்!

- மஹாகவி



# காலம் வாய்க்க வேண்டும்...

ஒன்றையொன்று பார்க்க மறுத்த
ஒன்றையொன்று கேட்க மறுத்த
ஒன்றிற்கொன்று முகந்திருப்பிய
உனதும் எனதும் நகர்களை இணைத்து
பல்லாயிரம் பாதங்களால் நடந்தனர் சனங்கள்

நம் நகர்களை இணைக்கும் இம் முட்பாதை
கசப்புகளால் மூடப்படுவதற்கு முன்னர்
ஸ்நேகிதம் ததும்பும் பாதங்கள் பாவிய
பால் வீதியென்று சொல்லக்கேட்டிருந்தேன்

இன்று
நீ உனது துயரை முடிந்து
எடுத்து வந்திருந்த கபன் துணியைச்
சுற்றிச்செய்த நெய்ப்பந்தங்களைச் சுடர்வித்து
நான் எனது முடிவுறாத தாகத்தை கொளுத்திய போது
அந்த நீண்ட யாத்திரை முடிவிற்கு வந்திருந்தது.

தோழ,
நான் உனது காயங்களின் பொருட்டு
எனது கண்களாலும்
நீ எனது அவமானங்களின் பொருட்டு
உனது கண்களாலும் அழும்
ஒரு காலம் வாய்க்க வேண்டும்

■ பிரியாந்தி.அ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லொழுக்கின் வசமாதல்



70களில் புதுவை

ஒரு நாவலாசிரியனின் தலைசிறந்த படைப்பு, அவனது சுயசரிதையைப் பெரிதும் தழுவிச் செல்லும் கதையாகவே காணப்படுகிறது என்பர். இதில் ஓரளவு உண்மை உண்டு சாள்ஸ் டிக்கின் சின் "ஒலிவர் ருவிஸ்ற்" தொடக்கம், கே.ஏ. அப்பாஸ் அவர்களின் "இன்குலாப்" வரை இந்தப் பண்பினைப் பல கலைஞர்களிடம் நாம் காண்கிறோம். இது ஏன் என்று சிந்தித்துப் பார்ப்போமானால் நமக்கு ஓர் உண்மை புலப்படும். நேரடி அனுபவத்திலிருந்து ஊற்றெடுக்கும் எழுத்துக்களே தலைசிறந்து விளங்கும் தகுதியைப் பெறுகின்றன. இந்த வகையிலே பார்க்கும்போது ஒருவன் தன்னையும் , தன் நண்பர்களையும், சுற்றத்தாரையும் பற்றியே மிக நன்கு அறிந்திருக்கிறான், உணர்ந்திருக்கிறான். எழுத்தாளனும் அப்படித்தான். அதனாலே தான் தனக்கு மிகவும் பழக்கப்பட்ட சூழல்களைச் சித்திரிக்கும் படைப்புகளை இதயநேர்மையுடன் அமைத்துக் காட்ட அவனால் இயல்கிறது. சுயசரிதைச் சாயல் தழுவிய எழுத்துக்கள் மேம்படுவதற்கும் இதுவே காரணம் எனலாம்.

இவ்வாறு நோக்கும்போது பல கதைகளில் எழுத்தாளனே கதாநாயகனாக, அல்லது ஒரு பாத்திரமாக ஏன் அமைகிறான் என்ற இரகசியம் நன்கு விளங்கும். பாரதிதாசனின் "புரட்சிக்கவி" யின் கதாநாயகன் ஒரு கவிஞனாக இருப்பதும் அகிலனின் பாவை விளக்கில் , தணிகாசலம் எழுத்தாளனாக இருப்பதும் இதே காரணத்தை ஒட்டித்தான்.

இவை இவ்வாறாக, சில கவிஞர்கள் பாத்திரங்களாக மாறி மறைந்து நின்று பேசாமல், நேரடியாகவே வாசகனை நோக்கிப் பேசும் ஒரு நிலையையும் நாம் காண்கிறோம். பாரதியார் தமது சுயசரிதையில் மட்டுமன்றி, பராசக்தியை நோக்கிப் பாடிய பாடல்களிலும், வேறும் பல பாடல்களிலும் தமது சொந்த மனக்கிடக்கையை நேரடியாகவே எடுத்துப் பேசுகிறார்.

சொந்த மனக்கிடக்கைகளையும் , சொந்தச் சூழலையும் எடுத்துப் பேசும் கலைஞர்கள் , தாம் ஈடுபடும் கலைத் துறையைப் பிரதான பொருளாக அமைத்துக் கலை படைப்பதும் உண்டு. தென்னகத்துக் கவிஞர் கலைவாணன் தமது கவிதைகள் பலவற்றில், கவிதைக்கலை பற்றியும் கவிஞன் திறம்பற்றியும் பாடியுள்ளார் . நம் நாட்டவரான "மஹாகவி"யும் , கவிஞனைப் பற்றியும், கவிதையைப்பற்றியும் பல கவிதைகளைப் புனைந்துள்ளார் . இந்த நூலின் ஆசிரியராகிய புதுவை இரத்தினதுரை அவர்களும் , தாம் என்ன குறிக்கோளுடன் கவிதை எழுதுகிறார் என்பதை எடுத்துரைக்கும் பல கவிதைகளை நமக்குத் தந்துள்ளார்.

புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கும் எவருக்கும் இந்த உண்மை புலப்படாமற் போகாது இது பற்றியே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**''அகத்தியன் தமிழ் வளர்த்தான்**
**அவன் மகன் வளர்த்தான் என்று**
**புசத்திடும் புலவர்"**

கூட்டத்தைக் கண்டு பொங்கும் நமது கவி ஞர்,

**"ஆற்றையும் , அருவி தென்றல்**
**அனைத்தையும் பார்த்துச் சும்மா**
**பீற்றிடும் கவிஞன் அல்லேன் ''**
**என்று பேசுகிறார் . அது மட்டுமன்று .**
**" வேலைகள் செய்யும் போது**
**விழுந்திடும் வியர்வை , ஓர் நாள்**
**மூளுமே பெரு நெருப்பாய்"**

என்ற அவரது முழுமையான நம்பிக்கையையும் நாம் தெளிவாகக் கண்டுகொள்ளுகிறோம்.

கலைஞன் எவனும், தான் ஈடுபட்டுள்ள கலைத்துறை மீது பெருமதிப்புப் பூண்டவனாகவே இருப்பான். மதிப்பினாலும், பற்றினாலும் அவனுடைய இதயத்துடன் மிக நெருங்கிய ஒரு பொருளாக அவன் மேற்கொண்டுள்ள கலைத் துறையும் மாறிவிடுகிறது கவிதைத் துறையினையே பொருளாக்கி எழுந்துள்ள கவிதைகளுட் சில மேட்டிமை பெற்று மிளிர்வதற்கு இதுவே காரணம் போலும்.
எனினும் மேற்படி கூற்று உண்மையான உயர் கலைகளுக்கே முற்றிலும் பொருந்துவதாகும் . மற்றையோர்களைப் பொறுத்தவரையில் , கவிதைக்கலை பற்றி எழுதினாலும்கூட , கவிதைகள் தரங்குன்றியனவாகப் போய்விடுவதைத் தவிர்த்தல் இயலாது இலக்கிய உலகம் இதனை உணருதல் நலம் , புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் பலவற்றில் உயர் கலைப்படைப்புக் குரிய பண்புகள் ஆங்காங்கே பளிச்சிடுவதை நான் காண்கிறேன் .
இந்நூலிலுள்ள கவிதைகள் அவரது திறமையின் முழுமையையும், இன்று அவர் எய்தியுள்ள தரச் சிறப்பின் சகல முகங்களையும் காட்ட மாட்டாது என்பது உண்மையே. எனினும் , அறிவறிந்த வாசகர்களும், நுணுகி நோக்கும் விமர்சகர்களும் இரத்தினதுரையின் கலையுலகப் பிரவேசம் நல்ல சில அறிகுறிகளையும் உடன் கொண்டு நுழைகிறது என்ற உண்மையை உணர்வார்கள் , இலட்சிய வீறு படைத்த இவ்விளைஞர் காதற் பாட்டுகள் சிலவற்றை யும் எழுதியிருக்கிறார் .




**''புது நகையை , பூவிரியும் சோலைக் காற்றை**
**புனலருவி தரும் சுகத்தை . புலரும் வேளை**
**மதுவருந்தும் வண்டினத்தின் கீதம் தன்னை**
**மாங்குயிலின் இசையோடு மழலைப் பேச்சை**
**இது வரைக்கும் நான் வெறுத்ததில்லை : இன்றே**
**இவையெல்லாம் வேம்பாகி விட்டதன்பே '**

என்று அவர் பாடும்போது , கிழடு தட்டாத உள்ளம் உடைய எவரும் ஒரு கணம் அச்சொல்லொழுக்கின் வசமாகி விடுவர் . இதில் ஐயம் இல்லை .


**இ. முருகையன்**
161/30 , புதுக்கடைத் தோட்டம் , கொழும்பு 12


( கவிஞர் புதுவை இரத்தினதுரையின் முதலாவது கவிதைத் தொகுப்பான 'வானம் சிவக்கிறது' நூலுக்கு ஈழத்தின் பிரபல கவிஞரும் தலைசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு வேண்டும்

பிரிவு வேண்டும்
கட்டாயம்;
பிரிந்தே ஆக வேண்டும்

தாயை
தந்தையை
சேயை
சகோதரரை
தோழரை
காதலை
துணையை
உறவுகளை

இவர்களில்
ஒருவரையோ
சிலரையோ
அனைவரையுமோ
சில காலம்
கட்டாயம் பிரிய வேண்டும்

அன்பு புரியவும்
அருமை மேன்மை தெரியவும்

தவிப்பு நிகழவும்
அர்ப்பணிப்பு ஆசுவாசம்
உணரவும்

நிகழ்த்திய நிகழ்த்தப்பட்ட
புறக்கணிப்பின் துரோகத்தின்
உண்மை நிலை தெளியவும்

ஆம்;
பிரிவுக்குதான் அன்பை
உணரும்
ஆத்ம சக்தி பல மடங்கு அதிகம்!

**வேலணையூர் ரஜிந்தன்**





# இயற்கை ஓர் அற்புதம்

வான்விட்டு வா நிலவே
வரவேற்க நானிருப்பேன்
அதிசயப் பூமியிது _ நாம்
அற்புதமாய் சுற்றிடுவோம்

உனைச்சுற்றி விண்மீன்கள்
வட்டமிட நான் இரசித்தேன்
ஒருமுறைதான் பூவுலகை
தொட்டிடவே வந்திடாயோ?

அழகான நதிகளிலே
சலசலவென ஒரு தாளம்
குடுகுடு கிழவிகளும்
வரும் அழகைக் கண்டிடாயோ?

மணம் வீசும் மலர்களிங்கே பூத்து
குலுங்குவதைக் காணத்தான்
ஓடியிங்கே வந்திடு நீ
இயற்கையோர் அற்புதம்

**இராசேந்திரம் குந்தவி,**
தரம் 11, கிளி/ உருத்திரபுரம் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கத்தின் தந்தை



நன்றாக உறங்குகிறேன்
ஐந்து ஆறு கண்கள் இருப்பது போன்ற
அலுப்பில்
நன்றாக உறங்குகிறேன்.

எனது புதிய கனவின் முகத்தில்
பேய் ஓவியங்களை அள்ளி எறிந்தவர்கள்
தூக்கத்தில் நடக்கும் மனிதர்கள்.

வீடு நிறைய நிசி
விளக்கைத் தேடி எடுப்பதென்பது
கண்களை ஒரு துணியால் கட்டி
விளையாடுவது போலிருக்கு.

அங்கே பேய் ஓவியர்கள் அமர்ந்திருப்பர்
குடும்பக் கதையெல்லாம் சொல்லி,
வேட்டைப் பற்களைக் காட்டிச் சிரிப்பர்
என்று
என் மகனுக்குச் சொன்ன கதைகள்
ஞாபகத்தில் வர பயந்து கத்திவிட்டேன்.

நிசி
பேய் ஓவியர்களின் வர்ணம்
பேய் ஓவியர்களின் வர்ணத்திற்குள்

இறங்கி நடக்கும் நான்;
தூக்கத்தில் பலவும் பேசுவதாக
முன்பொரு விடியற்காலையில்
மனைவி சொன்னாள்

இன்று பொழுது விடிந்தும்
உறங்கியவாறு கிடக்கிறேன்
எனது பல வருடகாலப்
படுக்கையில்.

## வேட்கை மேவட்டும்......!

குரல்களின்
ஓசைகள் பலவாறு
ஓங்கி ஒலித்தபடி

எமது கோசத்துளிகளை
வலிமையாய்
சேகரித்து தடைகளை
உடைத்து பயணிக்கின்றோம்,

நிரந்தர இருப்புரிமை
இழந்த பெருநிலத்தில்
சுதந்திரம் தேடி
உலகமெனும் மகாநதிக்கு
குரல்களை சமர்ப்பிக்கின்றோம்,

கேட்டுக்கொண்டே
அந்த நதி முடிவிடம் இன்றி..!

பேரரசர்களின் கொள்கை வகுப்பு
எம்மீது மேலும்
தீயாய் தெளிக்கப்படுவது
எமது வானத்தின் நீலத்தை
பிரிப்பது போன்றாகின்றது,

இறந்த நாட்களை
மறந்து விட எவராலும் முடியாது
அவை இன்னும்
இருக்கும் நாட்களை
வலுப்படுத்துகின்றன,

எமது பாடல்
எமது தேடல்
எமது வாடல்

எல்லாம் இதயத்தில்
விதையாய்
பதியப்படுத்தி வைத்துள்ளோம்,

விடுதலை இல்லாமல் கடைசி
தமிழன் உள்ளவரை
அவன் ஆன்மா
வீழ்ச்சி அடையாது,

வேட்கை மேவட்டும்......!



**தே.பிரியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குட்டிச் சுவரான குட்டித்தீவு

நீருக்குள் ஒரு நாடு
நித்தம் ஏதோ நடக்குது
நீண்ட குருதியில் குளித்தது
மதமே அரசாளுது

சனநாயக நாடகம் என்பது
தேர்தல் கூத்தோடு முடியுது
அடுத்த புள்ளடியிடும் வரை
மன்னராட்சி தொடருது

தேயிலைத் தோட்டத்தில்
சம்பளம் ஆயிரம் கேட்டு
ஆயுள் முழுதும்
பேச்சுவார்த்தை நடக்குது

போதிமரத்தான்
குடியேறிய இடமெல்லாம்
துப்பாக்கிகளே முளைக்குது
நிலத்து மக்களின் வாழ்வெலாம்
நொந்து கெட்டே முடியுது

இறந்த பின்னும் நிம்மதியில்லாமலே
எரிவதா, புதைவதா என்றே நாளும்
பிணங்களெல்லாம் அல்லாடுது

குட்டித் தீவொன்று
குட்டிச்சுவராய்ப் போனதே!

**வட்டக்கச்சி வினோத்**

# ஒன்றித்திருக்கும் நிழல்

குற்றம்
தேடும் உலகிடம்
தள்ளி நின்று
ஒரு குழந்தையை
வளர்ப்பது போல்
என் காதலுடன்
போராடுகிறேன்

மாறாத
புன்னகையையும்
குதிக்கால் நிலத்தில்
முட்டாத
உன் குளறுபடிகளையும்
ரசித்தபடி
நாழிகைகளை
மறக்கிறேன்

கடலிடம்
தப்பித்துக்கொள்ளாத
வானமாக
உன் நிழல் என்னோடு
ஒன்றித்துக்கிடக்கிறது

நான்கு கிண்ணங்களுக்கு
பிறகு நிறுத்திக்கொள்ளும்
மதுவல்ல நீ!

**நெடுந்தீவு க.யோகேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குகளின் காத்திருப்பு



பிணந்தின்னவும்
குருதி குடிக்கவுமென்றே
வளர்க்கப்படுகின்றன
வல்லூறுகள்.

வல்லூறுகளைச் சுமப்பவன்
புறாக்களைத் தின்று
சிரிக்கிறான்.

புறாக்களின் காலம்
அவன் சிரிப்புகளில்
தொலைந்து போயிற்று.

வல்லூறுகளைக் குறிவைக்கும்
கொக்குகள்,
தூக்கிய ஒற்றைக்காலை
மீண்டும் வைக்க இடமின்றித்
தவிக்கையில்..
தொண்டையில் சிக்கிய மீனை
கொக்குடன் சேர்த்துண்ண
எத்தனிக்கின்றன வல்லூறுகள்.

கொக்குகளின் காத்திருப்பு
புறாக்களின் காலத்தை,
மீண்டும் பிரசவிக்குமா?

**சு.க.சிந்துதாசன்**

# எனக்கென்றோர் வானம்

வானமொன்று எனக்கிருக்கின்றது.....
மிக மிக மிக மிக பரந்ததாய்......

இளநீல வர்ணத்தில்
பிடித்தமானதாய் இருக்கின்றது

புள்ளினங்கள் பறந்து செல்லும்
முள்ளில்லாப் பாதை

வெண்ணிலாக்கள் மறைந்து போகும்
மர்மங்கள்

இருளில் தூரத்தில்...
மின்னுகின்ற நட்சத்திரங்கள்
என எல்லாமே உண்டு என் வானத்தில்!

இல்லாது இருக்கின்ற
கடவுளைப் போன்று
நம்புகையில் என் கையில் வானம்!

ஒரே சூரியப்போர்வையின் கீழ்
என் வானம்
எனக்கு போதுமானதாயிருக்கின்றது..

புயல் மேகம் சூழ்ந்த போதும்
மீளவும் வெளிக்கின்ற
என் வானம் எப்போதுமே
எனக்குப் போதுமானதாயிருக்கின்றது!

**கோஜியா நவரூபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ராதேயன்

# கவிதையும் ஜீவாவின் மல்லிகையும்



**1960** களின் நடுப்பகுதி நவீன தமிழ்ப் புதுக் கவிதையின் வளர்ச்சி வீச்சுக் கொண்ட காலகட்டம். ஆரம்பத்தில் தமிழ் நாட்டிலும் பின் சமகாலத்தில் ஈழத்திலும் முனைப்புடன் வளர்ச்சி கொண்ட கவிதை என்பது மிக மிகச் சாமானிய முற்போக்கு கருத்தியல் சிந்தனை கொண்டவர்களுக்கு எளிமையான ஆனால் எழுச்சியைத் தூண்டும் சக்தி வாய்ந்த ஆயுதமாயிற்று. ஏகப்பட்ட விமர்சனங்கள், கண்டனங்கள், கிண்டல்களுக்கு மத்தியில் யாப்பிலக்கணத் தடைகளைக் கடந்து புதுக்கவிஞர்கள் தமிழில் புதிய ஒரு தலைமுறையினரின் தார்மீக உந்துதலால் தமிழிலக்கியப் பரப்பில் ஒரு புதிய களத்தை திறக்க வைத்தது.

தமிழில் சிறுகதைகளின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் மணிக் கொடி காலம், சரஸ்வதி காலம், தாமரைக் காலம் எனப் பல்வேறு இதழ்களின் வருகைக் காலகட்டங்கள் காரணமாக இருந்ததைப் போன்று தமிழ் நாட்டில் புதுக் கவிதையின் எழுச்சிக் காலமான வானம் பாடிக் காலக் கவிஞர்களின் புத்துயிர்ப்புக் கால கட்டத்தை கூறமுடியும்.

அஃ, கசடதபற, கணையாழி, அனல் போன்ற பல்வேறு கவிதை சிற்றிதழ்களின் வெளிப்படுகையானது மிகவும் பரபரப்புடன் கூடிய இலக்கிய வளர்ச்சிக்கான பெருங்கனவுமாயிற்று. அக்கினிபுத்திரன், நா.காமராசன், ஈரோடு தமிழன்பன் எனத் தொடங்கி மேத்தா, மீரா, அப்துல்ரகுமான், இன்குலாப், சித்தி எனத் தொடர்ந்து வேகங் கொண்டெழுந்து நவீன கவிதையை ஒரு புதிய எல்லையை நோக்கி முன்னெடுத்துவரும் இன்றைய காலக் கவிஞர்கள் வரை தமிழ்க் கவிதைக்கு ஒரு புதிய இலக்கிய மரபுவழியை ஏற்படுத்தியுள்ளார்கள். தமிழ் நாட்டு நவீன புதுக்கவிதை எழுச்சியும், வளர்ச்சியும் ஈழத்து இலக்கியப் பரப்பிலும் அதே காலகட்டத்தில் மூச்சுக் கொள்ளத் தொடங்கிய போது நவீன புதுக்கவிதை முற்போக்கு சிந்தனை கொண்ட புதிய தலைமுறை இளவல்களின் கருத்தியல் எழுத்தாயிற்று.

மரபுகள் மோதுதல் என்பது தமிழுக்கு புதிய தொன்றல்ல. அதுவும் ஈழத் தமிழ் அரங்கில் வளர்ச்சிப் போக்கு தனக்கென ஒரு தனித்துவ போக்கை அடையாளம் காட்டி தலை நிமிர்ந்த வேளையில் புதுக்கவிதை படைப்பாளிகளின் சிந்தனைப் போக்கில் புதிய வீச்சை உருவாக்கவே செய்தது.

இந்தப் புதுக் கவிஞர்களின் படையணியானது இலக்கியத் தடத்தில் வலுவாக கால் பதிக்க களமாகி வரவேற்பு பதாகையை ஏந்தி கைலாகு கொடுத்தவை ஈழத்தின் சிற்றிலக்கிய ஏடுகளேயாகும். இவற்றில் முக்கியமானவை சிரித்திரன் , மல்லிகை ஆகிய புகழ்பூத்த சஞ்சிகைகளே. சிரித்திரனும், மல்லிகையும் தத்தமக்குரிய தனித்துவ வழியில் புதுக்கவிதையாளர்களின் காலத் தேவை கருதி களம் அமைத்தன.

டொமினிக் ஜீவா ஒரு தீவிர இறுக்கமான கருத்தியலாளராகவும், முற்போக்கு சிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையாளராகவும், விருதுகள் வென்ற சிறுகதை யாசிரியராகவும் கம்பீரமான பத்திரிகையாளரா கவும் தன்னை இனங்காட்டியவர். அதேபோன்று நவீன புதுக்கவிதை மற்றும் புதுக் கவிதையாளர்க ளின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியும் வழங் கிய உற்சாகமும் அளப்பரியது.

இன்று புகழ் பெற்ற கவிஞர்களாக ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் மட்டுமல்லாது உல கத் தமிழ் இலக்கியப் பரப்பிலும் அடையாளம் காட்டி நிற்கும் சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், திக்கு வலை கமல், கலைவாதி கலீல், அன்பு ஜகவர்ஷா ஆதவன், சீமை சடாட்சரன் உட்பட எண்ணற்ற இளம் புதுக்கவிதையாளர்கள் மல்லிகை நாற்று மேடையில் வளர்க்கப்பட்டவர்களே. புதுவை இரத்தினதுரை, கல்வயல் குமாரசாமி, இ. முரு கையன், சிவானந்தன் போன்ற புகழ்பூத்த மரபுச் செழுமையும், புதிய சிந்தனையும் கொண்ட கவி ஞர்களும் மல்லிகை ஜீவாவால் உயர்ந்த முறையில் கௌரவிக்கப்பட்டவர்களேயாவர்.

ஆரம்பத்தில் வானம்பாடி கவிஞர்களின் படைப்புக்கள், அவர்கள் வெளியிட்ட சஞ்சிகை கள் ஏனைய சிற்றிலக்கிய இதழ்கள் என்பன ஜீவா வின் மல்லிகை அலுவலகத்தில் மட்டுமே இலக்கிய படைப்பாளிகளதும் கலைஞர்களதும் பார்வைக்கும் வாசிப்புக்கும் கிடைக்கக் கூடியதாக இருந்தன.

ஜீவா எப்போதுமே கவிதைகளில் ஈடு பாடு கொண்ட ஒருவர் .அதன் காரணமாகவே மல்லிகைப் பந்தல் வெளியீடாக பல்வேறு கவி ஞர்களின் தொகுப்புக்களை வெளியிட்டு அவர் களுக்கு கௌரவமளித்தார்.

“கலைஞனோடு முரண்படலாம் கவிஞ னோடு முரண்படக்கூடாது” என்பது ஜீவாவின் நிலைப்பாடு. இதனை கவிஞர் புதுவை இரத்தின துரையிடம் பல தடவை அவர் கூறியதுமுண்டு. எண்பதுகளின் நடுப்பகுதியில் மல்லிகைப்பந்தல் வெளியீட்டகத்தின் ஆதரவில் மாதந்தோறும் கவி அரங்கு கவிஞர் நிகழ்வு, இளம் கவிஞர் அறி முகம் என தொடர்ச்சியாக நிகழ்வுகளை நடத்து வதில் டொமினிக் ஜீவா பேரார்வம் கொண்டிருந் தார். ஆனால் போர்க்காலச் சூழல் அதற்கு வாய்ப் பானதாக இருக்கவில்லை.

ஜீவாவும் இன்றில்லை, மல்லிகையும் இல்லை
ஆனால் ஜீவாவும் மல்லிகையும் இணைந்து
வளர்த்தெடுத்த கவிஞர்களும் அவர்களின்
படைப்புக்களும் இன்னமும் ஜீவனுடன்.

நடுகை
இல. 01, D.10, உருத்திரபுரம்,
கிளிநொச்சி
nadukaimagazine@gmail.com

# எல்லோருடனும்...

இன்னொரு முறையும்பீனிக்ஸாக நடுகையின் மீள்வருகை இந்த இதழாக விரிந்தி ருக் கிறது. 2004 இல் ஒரு இதழோடும், 2009 இல் மூன்று இதழ்களோடும் நடுகையின் விதைப்புகள் இருமுறையும் கைவிடப்பட்டி ருந்தன. பொருளாதார நெருக்கடிகள், காலச் சூழல் என்பன இதற்கு முக்கிய காரணிகள். இந்த நிலையில் 12 வருடங்களின் பின்னர் மீண்டும் நடுகையின் அடுத்த பருவம் புதிய வர்களோடு ஆனால் அதே ‘கவிதைக்கான ஒரு காகித விதைப்பு’ எனும் இலக்கோடு தொடங்கியிருக்கிறது.

அத்தோடு கடந்த காலங்களில் யாழ்ப்பா ணத்தை மையமாக கொண்டிருந்த நடுகை யின் இயங்குகை, இம்முறை கிளிநொச்சி யைத் தன் தளமாக மாற்றியிருக்கிறது. இது தனியே ஒரு பிரதேசத்துக்குள் மாத்திரம் குறுகி நிற்காமல் நடுகையை திசையெங் கும் பரவச் செய்வதற்கான எத்தனமே.

கவிதைக்கான களமொன்றை காலம் கோரி நிற்கையில் நிகழ்ந்துள்ள நடுகையின் மீள் வருகை புதியவர்களை கவிதைப்பரப்பில் இனம் காட்டுவதோடு, ஈழத்து தமிழ்க் கவி தைப்பரப்பில் ஒரு மாற்றத்துக்கான அதிர் வையும் உண்டு பண்ண, வாசகர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

நடுகையின் தொடர்ச்சியான வருகைக்கும், காத்திரமான படைப்புகளுடனான பயணத் துக்கும் வாசகர்களே ஆணிவேர். அந்த நம் பிக்கை பொய்த்துப்போகாது காப்பது உங் கள் கடமை.

அன்புடன் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனே!



உன் தந்தை உனக்கு
எதனையும்
சேர்த்து வைக்கவில்லை
என்றே எண்ணுவாய்

தவறில்லை...

ஏனெனில்,
அன்று நானும்
அவ்வாறுதான் எண்ணினேன்

உன்னைச்சுற்றி இருப்பவற்றை
நீ தேடுவது சரி அதனுடன்
உன்னுள் உள்ளவற்றையும்
தேடு!

அப்போதுதான்...

காலம் உனக்கு
கண்ணியமான அனுபவங்களை
கற்றுத்தரும் போது
வாழ்வினை
வனப்பாக்கிக் கொள்வாய்

உனக்கு
கால்களிருக்கிறது நீ
நடந்து விடுவாய்...
கற்றுத்தர வேண்டிய
கட்டாயம் இல்லை

இருப்பினும்
எனது கைகள்
உனக்கு அருகிலேதான்

அலைந்து கொண்டிருக்கும்
தேவைப்படும் போது
பற்றிக் கொள்!

எனது தோல்விகளை
உன்னை வைத்து
நிறைவேற்ற நினைக்காத
என்னைப் போலவே...

உனது
வெற்றிகளில்
என்னை வைத்து மறைக்காமல்
நீயே கொண்டாடு!

விழுவது ஒன்றும்
மனித குலத்திற்கு புதிதல்ல!
ஆனால்...
மீண்டு(ம்)
எழுந்திருப்பதே வரலாறு...

தன் அன்போடு
தன்னம்பிக்கையையும்
சேர்த்து வைக்கும்
ஒவ்வொரு தந்தையும்
ஆசீர்வதிக்கப்படுகிறான்

தன்னம்பிக்கையை
கற்றுக்கொள்!
கற்றுக்கொடு!

நீயும்
ஆசீர்வதிக்கப்படவேண்டும்.

த. நிரஞ்சலன்

# அவை மட்டும் அவையாகவே....!

கோடைகாலம்:
இளவெயிலோடு சிலவேளை
கடுஞ் சூட்டோடும் இருக்கின்றது
கடந்த வருடத்தைப் போலவே.

இலையுதிர்காலம்:
தங்கத்தகடுகள் போல
இலைகளை உதிர்த்துவிட்டு
செந்நிறமாக இருக்கின்றது
கடந்த வருடத்தைப் போலவே.

குளிர்காலம்:
குளிர் உறையும்
ஊசி போல குத்தும்
வெண் பனிக்காக இருக்கின்றது
கடந்த வருடத்தைப் போலவே.

வசந்தகாலம்:
இரவில் கேட்கும்
மெலிதான அனுங்கல் போல
இப்போதும் வருகின்றது


நான் மட்டும்
யாரால் மாற்றப்பட்டேன்,..?



ஆங்கிலத்தில்: Charlotte Zolotow
தமிழில்: கோகுலராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஹைக்கூக்கள்



குழந்தை
பிறந்ததும்
காணாமல்
போகிறது
மலடிப்பட்டம்.



கலப்பையின் கூர்மை
போதுமானதாக
இல்லை
நிலம் நனைத்த மழை.



புகுந்த வீடு
எரிச்சல் ஊட்டுகிறது
விறகு அடுப்பு.



கட்டியதாலி
தங்கைக்குகைமாறும்
கறுத்தப்பொட்டுக்கள்.



உயிர்பெற்ற
காட்டாறுகள்
ஓய்விற்குப்பின்
இடம்பெயர்கின்றன
கூழாங்கற்கள்.



சோம்பல் முறித்த குருவி
காற்றில் வலம் வரும்
ஒற்றை இறகு.

களவுபோன மலர்
இன்னும்
ஞாபகப்படுத்துகிறது
காம்பின் தடம்.

**ஜிவிதன்**
திருநகர், கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தனப் பேழை

ஒரு வண்ணத்திப் பூச்சியின்
சிறகசைப்பைப்போல
படபடக்கும் கண்கள்
ஒரு புலுனியின் துள்ளலைப்போல
நடுங்கும் தொண்டைக் குழிகள்
சொல்ல இயலாமற் போயின
பிரிவை

துப்பாக்கிகளும் டாங்கிகளும்
உலவும் நாளொன்றில்
பதுங்கிய நகரில்
உயிர்த் தாகத்துடனிட்ட
முத்தத்தின்
ஒரு துளியிலிருந்தது
ஒரு யுகத்தின் பெருங்காதல்

எப்படித்தான் விலகிச் சென்றோம்?
தாயைப் பிரியும்
குழந்தையைப் போன்ற
விழிகளுடன்

எதிரியை விரட்டி
விழிமடல் மூடி
வீரக்கொடி போர்த்தி
துப்பாக்கியை அணைத்துத்
திரும்பியிருப்பவள் எனது
காதலியல்ல
இந்நிலத்தின் மகள்.

தனித்தனியாக உடையாது
தைத்தெடுத்துச் சென்ற
இருதயங்களை
திருப்பித் தராமல் சென்றவள்
புன்னகை பிரிந்த இதழ்களின்
வார்த்தைகளை மாத்திரம் விட்டுச்
சென்றாள்
ஈரமற்ற விரல்களின்
தனிமையை மாத்திரம் விட்டுச்சென்றாள்

எந்த மதுக்குவளையாலும்
மறக்க முடியாப் பேரன்பை எப்படி வெட்டி
எறிவேன்
அவள் உறங்கும் சந்தனப் பேழைபோலக்
கனத்துவிட்ட இருதயத்திலிருந்து?

நாடுதான் பெரிதெனச் சென்றவளின் வீர
முகத்தில்
பனைகளைப் போல அசையும் கொடிகளை
இனி, ஏந்திச் செல்கிறேன்
அவள் மாண்டுபோன போர்க்களத்திற்கு.

**தீபச்செல்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மனச்சமநிலை

இறக்கைகள் இன்றி பறக்கவும்
சில்லுகள் இன்றி ஓடவும்
முடியுமானால் அது
பறவைகளால் அல்ல
இயந்திர உறுமல்களாலும் அல்ல
மனித மனச்சமனிலி
மாத்திரமே புரியமுடியும்
இச் சாதனை தனை

விரலுக்கேற்ற வீக்கமின்றி
மாயைகள் பலதில் மயங்கி
பெற்றவர் உற்றவர் மறந்து
அவர்தம் கடமை மறுத்து
நீ தேடும் உலகம் தான்
எதுவோ? எங்குண்டோ?

நீவீர் மறுப்பது
உறவுகளை மட்டுமல்ல
தம்மையும் தான் என்பதை
ஏனோ உணரவில்லை

அன்பு, காதல்,
தேசம், மொழி
உறவுகளை மறந்து
இவ்வுலகில் நீ
தேடித்தேடி சேர்க்கும்
அத்தனையும் உமது
எவ்வுலக வாழ்விற்கென
எப்போதாவது சிந்தனை
செய்தாயா முட்டாளே??

எட்டுமணி நேர வேலை
எட்டு மணிநேர தூக்கம்
மீதி எட்டு உன்
இன்பத்திற்காய்
பகிர்ந்ததை மறந்து
மனித மனச்சமத்துவம்
தளம்பி தள்ளாட
எழும்பி நடக்க நீ
முயலும் வேளையில்
எல்லாம் பலனின்றி
வீழ்ந்து வீழ்ந்து
உன் பயணம் தான்
எங்கே செல்கிறது???

முகநூலில் நண்பர் பலர்
இருந்திடலாம் உனக்கு
ஆனாலும் முக எதிரில்
உன் கை கோர்த்து
நடை பயில உறவுகள்
உண்டா உன்னிடத்தில்?

வாழ்வதனை உணர்ந்திட
வாழ்வதனை கற்றிட
வாழ்வதனை நேசித்திட
மொத்தத்தில் வாழ்வின்
மொத்தத்தை வாழ்ந்திட

மண்ணாசை பெண்ணாசை
பொன்னாசை மீது
பேராசை பிடித்து
அலையாது உன்
வாழ்வதனை
அடக்கிவிடு
அடங்கிவிடு
மனித மனச்சமநிலையில்!

**மீசாலையூர் சக்தி விஜயாவேல்**
*சாவகச்சேரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞாபகங்கள் தாலாட்டும்!

புழுதி பறக்க
பற்றைக் காட்டில்
ஒற்றைக் காலில்
ஓடியாடிய ஞாபகம்...!
உச்சி மரத்தில்
ஏறிக் கொண்டு
பறவையாய் நானும்
மாறிய ஞாபகம்...!

தோப்புக்குள்
மாங்காய் பறித்து
மாட்டிக்கொண்ட
ஞாபகம்...!
கால்நடையாய் பலதூரம்
நடந்து சென்ற ஞாபகம்...!

தோழியோடு
சின்னச் சமையல்
சமைத்த ஞாபகம்...!
காத்திருந்து
தூண்டிலில் மீன்
பிடித்து மகிழ்ந்த
ஞாபகம்...!


அடம்பிடித்து
ஒற்றை ரூபாய்க்கு
மிட்டாய் வாங்கிய
ஞாபகம்...!
அம்மா கையால்
பிரம்படி வாங்கிய
ஞாபகம்...!

வாத்தியார் தலையில்
கொட்டு வைத்து
திட்டிய ஞாபகம்...!
காய்ச்சல் என்று
பொய் சொல்லி
பள்ளிக்கூடத்திற்கு
விடுமுறை எடுத்த
ஞாபகம்...!

ஞாபகங்களாய்
பல நிகழ்வுகள்
வாழ்க்கை என்னும்
நதியினிலே...!

இன்னும் எத்தனை
ஞாபகங்கள் எம்மை
தாலாட்டுமோ...?
இன்னும் எத்தனை
ஞாபகங்கள் எம்மை
ஏங்க வைக்குமோ...?

**அஷ்வினி வையந்தி,**
கிழக்கு பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழுந்தோம் எழுவோம்

ஆண்டாண்டு காலமாக
அல்லல் பட்டு நிற்கிறோம்!
முறையாக உழைத்தும்
வாழ்க்கையில்
முழுமை இன்றி தவிக்கிறோம்!

எங்களின் சந்தா பணத்தில்
உட்கார்ந்து உண்ணுகையில்
தெரியவில்லையா?
நாங்கள் படிக்காத பட்டிக்காடு
என்று!
ஆயிரம் ரூபா சம்பளம்
கேட்டவுடன் தான்
வெட்டி வீராப்பு பேசுகிறது
அரசியல்...

ஒட்டை வீட்டை சாட்டியே
ஒட்டு கேட்ட போதும்!
ஆயிரம் தருவேன் என்று
ஆசை காட்டி பேசிய போதும்
கூட...
இந்த முறையேனும் கிடைக்கும்
என்ற
அசட்டு நம்பிக்கையில் தான்
அரசியலை நம்பினோம்!
ஆனால் நிகழ்ந்தது
ஆட்சி மாற்றம் மட்டுமே!

எங்களை அடக்கி விட
முடியாதென
அறிந்தே தான்
“இல்லை” என்றிடாமல்
இன்னமும் இழுக்கின்றனர்
”ஆ..யி..ர..ம்..
த..ரு..வோ..ம்..”
என்று!

இத்தனை பொய்களையும்
ஏமாற்றங்களையும்
துரோகங்களையும்
வலிகளையும்
நாங்கள் தாங்கி நிற்பது
உழைத்து வாழும்
மலையகத்தான் என்ற
ஓயாத்திமிரிலேயே!

**பா.கனகேஸ்வரி**
யாழ். பல்கலைக்கழகம்,
ஊடக கற்கைகள் துறை.

---

# கனவு



காணாத காட்சிகள்
கண்கள் காண,
போகாத இடமெல்லாம்
கால்கள் போக,
கேளாத இசையெல்லாம்
செவியில் செல்ல
உணராத உணர்வொன்றை
உள்ளம் உணர்ந்து
முடிப்பதற்குள்

சட்டென்று பிரிந்தாயே
கோபம் நீ கொண்டாயோ....?
விழித்ததும் புரிந்தது நீ
விடைபெற காரணம்
விடியலே என்று.
மீண்டும் வருவாயா?
உன்னோடு நான் கண்ட
மர்ம தேசம் தனில்
மறந்து விட்ட என்
மனதினை மீட்டெடுக்க...

**தர்சிகா சிறீதரன்.**
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிஜங்களைத் தேடி...

நிகழ் நீளங்களில்
மலர்ந்தபடியிருக்கும் நிஜங்களை
வாரிக்கொள்கிறது பொய்யின்
மாய அலை......
பாதைச்சுருள்களில்
முடிவிலிப் பயணக்கனவுகள்
மழை நேரத்து வானவில்....
மீளமீள மனம் நினைவுத்
தித்திப்புகளை மறுத்து முகத்தில்
நிஜம் அறையும்....
வண்ணங்களை கையில் சேர்க்காமல்
வண்ணத்துப் பூச்சியைத் தீண்டுதல்
சாத்தியமா?

காலடிகளுக்காகத் தானே
இந்த பாதைகளும் பயணங்களும்
தவித்துக் கிடக்கின்றன....
சூழ்ந்து கிடக்கும் வானும் நிலமும்
மனக்கடலில் அலையடிக்கின்றன...
விரியும் சிறகுகளைத்தான்
வானம் வாரி தன்மேல் படரச் செய்கிறது..
காற்று அறியாத பறவைகளின்
வழி ஏது?
அலை தழுவாத மீன்கள் ஏது?
நிஜம் உடைக்காத கனவு ஏது?

இன்மைகளில் ஒலி நிறைந்து
கனவள்ளித் தின்கிறது
மனமதிர்ந்து விழி கனக்கிறது

- கயூரி புவிராசா



வரவிருப்பவை



**நீரூறிய சொற்கள்**
**ந.குகபரன்**

புதியவை




**விடாய்**
**கவிஞர். தில்லை**
**விலை.90**
**(இந்திய ரூபாய்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ சு. குணேஸ்வரன்





# உணர்தலும் தரிசித்தலும்

பா. அகிலனின் “ஒன்றும் பலவும்: சொற்களினதும் மௌனத்தினதும் உருவங்கள்” கலம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இக்காட்சிக் கூடமானது கவிதைப் பிரதிகளாகவும் உருவங்களாகவும் இசைக்கோர்வைகளாகவும் உணர்வுத் தொற்றலை ஏற்படுத்தும் வகையிலான குறியீட்டு அமைப்பையும் கொண்டிருந்தது.

கடந்த காலங்களும் நிகழ் காலங்களும் இணையும் புள்ளியில் வாழ்வையும் வடுக்களையும் நினைவுகளையும் கிளறவல்ல புதிய முயற்சி இது. சொற்களையும் வரிகளையும் கவிதைப் பிரதிகளையும் காட்சியூடகமாகக் கொண்டு வந்துள்ளமை வித்தியாசமானது. இவற்றுக்கூடாக நினைவுகளைக் கிளறவும் உணர்வுத் தொற்றல்களை ஏற்படுத்தவும் மக்களின் உள்ளமுங்கிய மௌனங்களை வெளிப்படுத்தி வெளிச்சத்தை அவாவும் நிலையினையும் இக்கண்காட்சி ஏற்படுத்தியுள்ளது.

அங்கிருந்த சொற்களினதும் மௌனத்தினதும் உருவங்களை ஒளிப்படங்களால் காட்சிப்படுத்தமுடியாது என்ற உண்மையை நேரில் தரிசித்த ஒவ்வொருவரும் உணர்ந்திந்திருப்பர்.


**உங்கள் கவிதை நூல்களின் அறிமுகம் நடுகையில் இடம்பெற வேண்டுமாயின் இரு நூற்பிரதிகளை எமக்கு தபால் மூலம் அனுப்பிவையுங்கள்.**

++++++++++++++

அறியப்படாத புதுமுக இளங்கவிஞர்களை அறிமுகப்படுத்தும் நடுகையின் ஆவல் நிறைவேற, இளங்கவிஞர்கள் பற்றிய குறிப்புக்களை எமக்கு அனுப்பிவையுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ சி.ரமேஷ்

# பார் போற்றும் பாவலர் துரையப்பாபிள்ளை

**நா**வலரின் வழித்தோன்றலாகவும், சமூக வழிகாட்டியாகவும், கல்வியின் காவலனாகவும், நற்றமிழ் வித்தகனாகவும், நாவன்மை மிக்க பாவலனாகவும் விளங்கிய பாவலர் துரையப்பாபிள்ளை யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் அருளம்பலம், தங்கம்மா தம்பதியினருக்கு 1882.10.12 மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைத் தெல்லிப்பழை ஆங்கில வித்தியாலயத்திலும் மேற்படிப்பை வட்டுக்கோட்டை செமினரியிலும் (வட்டுக்கோட்டை சர்வசாத்திரக் கல்லூரி) பயின்றார். இவர் 1890ஆம் ஆண்டு கேம்பிரிஜ் உயர் நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் சித்தியெய்திய பின்னர் சிறிதுகாலம் அரச சேவையில் பணியாற்றி அதனை துறந்து பாணந்துறை தூய யோவான் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். இவரது ஆளுமையும் முற்போக்கு சிந்தனைகளும் பம்பாய் ( இன்றைய மும்பை) மாநிலத்திலுள்ள கோலாலம்பூர் மிஷன் உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் விருத்தி பெற்றன. இவர் 1900ஆம் ஆண்டு தெல்லிப்பழை ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் அதிபரானார். இவர் 1910ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமாருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் தலைமை ஆசிரியர் பதவியைத் துறந்து அதே ஆண்டு மகாஜனக் கல்லூரியை ஆரம்பித்தார்.

கவிதை பாடுவதில் வல்லவரான துரையப்பா சமூகவாழ்வுக்குத் தேவையானவற்றை மக்களுக்கு அவசியமானவற்றைப் பாடினார். இவருடைய கன்னிப்படைப்பாகிய 'கீதரச மஞ்சரி' என்னும் நூல் 1901ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் 1921 ஆம் ஆண்டு இந்துசாதனப் பத்திரிகையின் ஆங்கில உதவிப்பத்திராதிபராக நியமிக்கப்பட்டு 1924இல் பிரதம பத்திராதிபரானார். 1926ஆம் ஆண்டு சரஸ்வதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வித்தியாசாலையை நிறுவி நல்ல முறையில் வளர்த்தெடுத்தார். இவரது இலக்கிய நோக்கு கவிதையில் வெளிப்பட் டது.

"சமகாலச் சமூகத் தேவைகளை யும் பிரச்சினைகளையும் பொது மக்களுக் குப் பொருள் விளங்கத் தக்கவாறு எடுத்துக் கூறிய வகையில் பாவலர் துரையப்பா பிள்ளையை ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றின் மைல் கல்லெனக் கொள்ளல் கூடும்" என பேராசிரியர் சி.தில்லைநா தன் அவர்கள் குறிப்பிடும் கருத்து சுட்டிக்காட்டத்தக்கது.

நவீனத்துவத்தின் விடிவெள்ளி என அழைக்கப் பட்ட துரையப்பா பிள்ளை பாரதியைப் போன்று தேசியப் பின்னணியில் வாழ்ந்த கவிஞர். பொது மக்களுக்குப் பொருள் விளங்கத் தக்கவாறு கைத் தொழில், கூட்டுமுயற்சி, பெண்கல்வி, சாதி, விவாகமும் சீதன வழக்கமும், எங்கள் கற்ற வாலிபரின் பழக்க வழக்கங் கள், தேசாபிமா னம், கைக்கூலி வாங்குதல், கைத் தொழில், கூட்டுமுயற்சி, பெண்கல்வி, சாதி என அக்கால சமகாலச் சமூகத் தேவைகளையும் பிரச்சினைகளை யும் தம் பாடல்களில் எடுத்துரைத்தவர்.

**பாவலர் துரையப்பா பிள்ளையினது வருகையுடன் இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணக் கவிதை முனைப்பு பெறுகிறது. தேசநலனுக்கு உகந்த சமூகக் கருத்துக் களைத் தன்முனைப்புடன் வெளிப்படுத்துவதற்கு தன் கவிதைகளில் எளியமொழி, எளியநடை, எளியசந்தம் முதலானவற்றைக் கையாண்டார்.**

பாவலர் துரையப்பாபிள்ளை யினது வருகையுடன் இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணக் கவிதை முனைப்பு பெறுகிறது. தேசநலனுக்கு உகந்த சமூகக் கருத்துக்களைத் தன்முனைப் புடன் வெளிப்படுத்துவதற்கு தன் கவிதைக ளில் எளியமொழி, எளியநடை, எளியசந் தம் முதலானவற்றைக் கையாண்டார். சமகால அரசியல், சமூகப் பிரச்சனைகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்திய பாவலர் அந்நியபழக்கவழக்கங்களையும் கண்மூடித்தனமான மூடக்கொள்கை களையும் கண்டித்துப் பாடினார்.

**கொண்டைக்குப் பூச்சூடும்குணம் போச்சுநாடாக்**
**கொண்டுமயிர் முடிக்கும் காலமாச்சு**
**தண்டைப் பாதசரங்கள் தவிப்பாச்சு பெண்கள்**
**சப்பாத்துக்குள் நொண்டிவரக் காலமாச்சு**

எங்கள் தேசநிலை இதுவென அரிவைய ரைக் கிண்டல் செய்த பாவலர் அக்காலப் பகுதியில் சைவசமயத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பாடுகிறார்.

**பழஞ்சைவ சமயங்கை விடலாச்சு ஒரு**
**பகிடிச்சை வமிங்கு வரலாச்சு**
**ஆங்கில சைவமென் றொருசமயம் இங்கு**
**அரசியற் சைவமென் றொருசமயம்**
**தாங்கள் பெருக்கவொரு சைவசமயம் எனத்**
**தாபிக்கி றார்சில ரிதுசமயம்**

ஈழத்தில் ஆங்கிலம் கற்ற நடுத்தரவர்க்கம் சமூக முக்கியத்துவம் பெற்று வளர்ந்த காலத்தில் இப்புதிய வர்க்கத்தால் சமூகத் தில் காணப்பட்ட முரண்பாடுகளையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையும், சமூகஅக்கறையோடும், ஆற்றலோடும் தம் பாடல்களில் சித்திரித்தவர்.

பாவலர் அவர்கள் திருமுறைக ளிலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தேவார திருவாசகங்களை மனமுருகிப் பாராயணஞ் செய்பவர். அவர். இதன் காரணமாக தேவார திருவாசகங்களில் இடம் பெறும் அரிய விடயங்களை கண்ணுற்று பாவலர் அதனை மக்கள் விரும்பும் வண்ணம் இனிய தமிழில் பாடினார். "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற திருவாசக அடிகளின் சாரத்தைச் சிவமணிமாலையில் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தம் சமயமொன் றேஉண்மை
என்று தரனிதனில்
நித்தம்பல் வேறு சமயிகள் வாது
நிகழ்த்துகின்றார்
எத்தலத் துஞ்சிவ மொன்றே
யுளதென வெண்ணுவைரேல்
சித்தப் பிரமையோர் காலுங்கொள்
ளாரச் சிதடருமே

தென்னாட்டில் சிவன் என்று அழைக்கப்பபடும் இறைவனை எல்லோரும் இறைவன் எனக் கொள்வதால் எவ்வித பேதமும் ஏற்படாது என்பதை மேற்குறிப்பிட்ட பாடல் உணர்த்தி நிற்கிறது.

"சிந்தனைச் சோலையில் இடம்பெறும் சிவமணிமாலை தவிர்ந்த அனைத்து கவிதைகளும் சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்கான இலக்கிய முயற்சிகளாகவே உள்ளன" என பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவார். முன்னைய கவிதை மரபைச் சிதைத்து உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமையைப் புகுத்தியவராகப் பாவலர் விளங்குகின்றார். சாதாரண மக்களைத் தம் பாடல்கள் சென்றடைதல் வேண்டும் என்னும் நோக்கில் பாமர மக்களால் கையாளப்பட்ட இசை வடிவங்களைப் பின் பற்றி இவரெழுதிய யாழ்ப் பாண சுவதேசக்கும்மி (1907), எங்கள் தேசநிலை (1917), இதோபதேச கீதரசமஞ்சரி (1901) என்னும் நூல்கள் விதந்து போற்றத்தக்கவை. சிறுவர்கள் ஆடிப்பாடும் சமயச் சார்புடன் எழுதப்பட்ட கும்மிப் பாடல் வடிவத்தினைச் சமூகச் சார்புக்கு மடைமாற்றியே யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மியைப் பாடினார்.



பாவலர் கிறிஸ்தவராக இருந்த காலத்திலேயே கீதரச மஞ்சரி வெளியானது. எனினும் ஒரு மதத்தையோ, ஒரு கடவுளையோ சாராது பொதுநோக்கு நிலையினின்று பிறழாமல் இவர் கீதரச மஞ்சரியைத் தந்தார்.


## சந்தா விபரம்

தனி இதழ் : ரூபா 20.00
ஆண்டுச் சந்தா : ரூபா 240.00
(தபாற்செலவு உட்பட)

வங்கிக் கணக்கிலக்கம்:
09301315497 5
செலான் வங்கி, கிளிநொச்சி

உங்களுடைய **படைப்புக்களையும், விமர்சனங்களையும்**
நடுகை ஆவலோடு எதிர்பார்க்கிறது.
நடுகையின் வளர்ச்சியில் அவை
பங்களிப்புச் செய்யும் என நம்புகிறோம்



நடுகை

முகவரி : இல.01, D.10, உருத்திரபுரம்,
கிளிநொச்சி
மின்னஞ்சல்: nadukaimagazine@gmail.com
இணையம் : www.nadukai.com

நிர்வாகம்: அம்பலம் குழுமம்
ஆசிரியர்: ஜனகா நீக்கிலாஸ்

எமது இணையத்தளத்துக்கு செல்ல இங்கே 'ஸ்கான்' செய்யவும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org